**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் - 2024**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் ("நிறுவனம்") 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகளை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2017 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவன அதிகாரச்சட்டம், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது

கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

**1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.5.1 பெற வேண்டிய தொகை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 1-3 வருட காலமாக முன்கொண்டுவரப்படும் ரூபா 626,399 தொகையான சுற்றுலா விடுதியின் வருமானம், சிற்றுண்டிச்சாலை வருமானம் மற்றும் பாடநெறி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்படாத சிற்றுண்டிச்சாலை வாடகையை உடனடியாக அறவிடுவதற்கும் Bunglow Rent தொகையை அங்கீகாரத்துடன் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைத் தொகையை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| செலுத்த வேண்டிய ரூபா 652,409 தொகையான அட்டுறு செலவினம் மற்றும் ரூபா 3,272,007 தொகையான செலுத்த வேண்டிய வைப்புகள் 1-3 வருடங்கள் வரையான காலமாக தீர்ப்பனவு செய்யப்படாது காணப்படுவதுடன், ரூபா 2,421,404 ொதகையான கடன் கொடுத்தோர் மீதி ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக தீர்ப்பனவு செய்யப்படாது காணப்பட்டது. | பேரேட்டுப் பதிவுகள் மூலம் மற்றும் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் அந்த மீதி புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு அல்லது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | செலுத்த வேண்டிய பணத்தை தாமதிக்காது தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 2021/01 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட நல்லாளுகைக்கான வழிகாட்டி கோவை | | | |
| (i) | 3.2 ஆம் பந்தி | பதவியணிக்கு ஆட்சேர்க்கும் நடைமுறையொன்றை தயாரித்து ஒவ்வொரு பதவிகளுக்குரிய சம்பள மற்றும் வேதனக் கட்டமைப்பு நிர்ணயிக்கப்பட்ட பின்னர் அது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறானதொரு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது | வரிசை அமைச்சின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 280 பதவியணியினருக்கு சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | | |
| (ii) | 3.6 மற்றும் 7.5 ஆம் பந்தி | மூலோபாயத் திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் அடிப்படையில் செயலாற்றல் மதிப்பீட்டு கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்தப்பட்டிராததுடன், கால அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டிய செலாற்றல் அறிக்கை வரிசை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயலாற்றல் அறிக்கை வரிசை அமைச்சு மற்றும் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (iii) | 6.7 ஆம் பந்தி | நிலையான சொத்துக்கள் மற்றும் இருப்பு தொடர்பில் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டுக்கான பொருள் மெய்மையாய்வு தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 396 | கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 3,310,802 ரொதகையான 10 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டரீதியான சிக்கல்கள் ஏற்படுவதை தடுப்பதற்காக இரத்துச் செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**1.7 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தினால் பேணிச் செல்லப்படும் நடைமுறைக் கணக்கொன்றில் ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 67.65 மில்லியன் மீதியொன்று நிலவியதுடன், அந்த மீதி 2025 மார்ச் 31 ஆந் திகதியளவில் ரூபா 70.79 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. அவ்வாறே அந்த கணக்கில் ஆண்டின் அனைத்து நாட்களிலும் ரூபா 40 மில்லியனான ஆகக் குறைந்த மீதியொன்று விளைவற்று காணப்பட்டமையால், அந்த பணத்தை முதலீடு செய்வதன் மூலம் அண்ணளவாக ரூபா 4,404,667 தொகையான வட்டி வருமானத்தை பெற்றுக்கொள்ள காணப்பட்ட சந்தர்ப்பம் நிறுவனத்திற்கு இழப்பாகியிருந்தது. | மிகைப் பணத்தை கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் நிறுவனத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மிகைப் பணத்தை ஆக்கபூர்வமாக முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டில் நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவு ரூபா 145,142,010 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,070,583,360 ஆக இருந்தது. அதற்கமைய முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 1,215,725,370 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு கடந்த வருடத்திற்கு ஒப்பாக நன்கொடை பெறுவனவுகள் பொருண்மையான அளவில் குறைவடைந்தமை மற்றும் பகுதி நேர பாடநெறிச் செலவினங்கள், சம்பளங்கள் மற்றும் போக்குவரத்துச் செலவினம் மற்றும் நிதிச் செலவினங்கள் அதிகரித்தமை ஆகியன பிரதான காரணங்களாக இருந்தன.

**2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு**

| விபரம் | 2024 திசெம்பர 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டு ரூபா மில். | 2023 திசெம்பர 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டு ரூபா மில். | வேறுபாடு சாதகமான / (பாதகமான) ரூபா மில். | சதவீதம் % |
|---|---|---|---|---|
| மூலதன மானியங்கள் | 606.48 | 418.37 | 188.11 | 45 |
| வெகுமதிகள் | 19.81 | 1,297.89 | (1,278.08) | 98 |
| ஆளணி வேதனம் | 322.45 | 215.7 | (106.75) | 50 |
| பகுதியளவு பாடநெறி செலவினம் | 186.10 | 144.39 | (41.71) | 29 |

கடந்த வருடத்திற்கு ஒப்பாக மூலதன மானியம் 45 சதவீதத்தினால் அதிகரித்துள்ள போது, மானியப் பெறுவனவு 98 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. அவ்வாறே ஆளணி வேதனங்கள் மற்றும் பகுதியளவு பாடநெறி செலவினங்கள் முறையே 50 சதவீதத்தாலும் 29 சதவீதத்தாலும் அதிகரித்தமையை காணக்கூடியதாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவன அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் பணிப்பாளர் சபையை வினவி உரிய அமைச்சரால் 06 பேரை கொண்டமைந்த மதியுரை சபையொன்று நியமிக்கப்பட வேண்டியதுடன், அந்த மதியுரைச் சபையால் அதிகாரச்சட்டத்தின் 04 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அனைத்து விடயங்கள் தொடர்பிலும் பணிப்பாளர் சபைக்கு மற்றும் உரிய அமைச்சருக்கு பரிந்துரை வழங்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவ்வாறானதொரு மதியுரை சபையொன்று நியமிக்கப்படாமையால் நிறுவனத்தின் பணிகள் உரிய முறையில் நிபுணத்துவம் வாய்ந்த மதியுரைச் சபையின் அறிவுரைகளின் அடிப்படையில் செயற்படுவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | மதியுரைச் சபையின் அங்கத்தவர்களை நியமிப்பதற்காக அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய உரிய நிறுவனங்களிலிருந்து முன்மொழிவுகளை பெற்று அதனை கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் மான்புமிகு பிரதமர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில்சார் கல்வி அமைச்சரின் மூலம் இந்த நிறுவனத்தின் மதியுரைச் சபையை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை 2025.04.29 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்ற துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவன அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் தொழிற்கல்வி குறித்த | முதலாவது பருவ சஞ்சிகை 2024 திசெம்பர் மாதத்தில் வெளியிடப்பட்டது மற்றும் இணையத்தளத்தில் | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் தாமதமின்றி நிறைவேற்றப்பட வேண்டும், |

| | | | |
|---|---|---|---|
| | ஆராய்ச்சி நடத்துதல், வலய மத்திய நிலையங்களை நிறுவுதல் மற்றும் தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி குறித்த சஞ்சிகைகள் மற்றும் பருவ சஞ்சிகைகளை வெளியிடுதல் ஆகியவை நிறுவனத்தின் செயல்பாடுகளாக குறிப்பிடப்பட்டிருந்தாலும், மீளாய்வாண்டின் போது 01 சஞ்சிகை மற்றும் பருவ இதழ் மட்டுமே வெளியிடப்பட்டிருந்ததுடன், 13 ஆராய்ச்சிகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும், ஆராய்ச்சிகளின் முன்னேற்றம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இலத்திரனியல் சஞ்சிகையாக வெளியிடப்பட்டது. இரண்டாவது சஞ்சிகையை 2025 ஜூலை மாதத்தில் வெளியிடுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | என்பதுடன் மேலும் ஆய்வுகளின் முன்னேற்றத்தையும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (இ) | நிறுவனத்தினால் பயன்படுத்தப்படும் 29 ஏக்கர் 0.35029 ஹெக்டேயர் பரப்பளவான 05 காணிகள் இலங்கை போக்குவரத்து சபை மற்றும் இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமானது என கூறப்பட்ட போதிலும், அந்த காணிகளின் சட்ட உரிமையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்தக் காணிகளின் உரிமையை முறைப்படி நிறுவனத்திற்கு மாற்றுவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி 2024.07.04 ஆந் திகதிய கடிதம் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | இந்த காணிகளின் சட்டப்பூர்வ உரிமை கையகப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | அத்திடிய பிரதேசத்தில் அமைந்துள்ள விடுதி மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தாலும், பதவியணியின் 54 பேர் அங்கு தங்கியுள்ளனர். இருப்பினும், ஊழியர்களுடன் எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் எதுவும் எட்டப்படவில்லை, மேலும் தங்கும் விடுதியில் நீர் மற்றும் மின்சாரம் பயன்படுத்துவதற்கு கட்டணம் வசூலிக்கப்படவில்லை. மேலும், விடுதிக்கு உதவி விடுதிக் கட்டுப்பாட்டாளர் | உதவி விடுதிக் கட்டுப்பாட்டாளர் பதவிக்கான வரைவு ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்காக வரிசை அமைச்சிற்கு அனுப்ப உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | விடுதியை நிர்மாணித்ததற்கான நோக்கம் நிறைவேற்றப்படும் வகையில் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பதவியை நிறுவுவதற்கும், உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | | |
| (உ) 2020 இல் தொடங்கப்பட்டு 2021 ஆகஸ்ட் 31 ஆம் தேதிக்குள் முடிக்க திட்டமிடப்பட்ட கிளிநொச்சியில் உள்ள இலங்கை ஜெர்மன் பயிற்சி நிறுவனத்தின் (SLGTI) 03 மாடி விடுதியின் கட்டுமானத்திற்காக ரூபா 219.52 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் விடுதியின் முதல் மற்றும் இரண்டாவது தளங்களின் கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | மாணவர்களின் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நிர்வாகம் உடனடி தீர்வுகளை வழங்க வேண்டும். |

**3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தற்போதுள்ள வளங்களின் பற்றாக்குறையைக் காரணம் காட்டி, இரத்மலானையில் உள்ள இலங்கை ஜெர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம், முழுநேர பாடநெறிகளுக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களை 650 ஆக மட்டுப்படுத்தியிருந்தாலும், முழுநேர பாடநெறிகளை நடாத்துவதற்கு ஆனமடுவவில் 09 ஏக்கர் நிலத்தையும், கிளிநொச்சியில் 25 ஏக்கர் நிலத்தையும் பயன்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்படவில்லை. | பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | நிறுவனத்தின் இயலளவை அதிகரிப்பதற்கு முறையான திட்டத்துடன் செய்யப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்திற்குச் சொந்தமான பணிப்பாளர்/அதிபர் உத்தியோகபூர்வ இல்லம் 2020 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படவில்லை என்றாலும், 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை உத்தியோகபூர்வ இல்லத்தின் பாதுகாப்புக் கட்டணமாக செலுத்தப்பட்ட ரூபா 4,170,930 தொகை விளைவற்ற செலவினமாகியிருந்தது. | உத்தியோகபூர்வ இல்லம் பழுதுபார்க்கப்பட்டு தற்போதைய பணிப்பாளர் அதிபரின் பயன்பாட்டுக்கு எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. | விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெற்றிடமாகியுள்ள பிரதிப் பணிப்பாளர், பிரதி அதிபர், பிரதான பொறியியலாளர் (பயிற்சி) மற்றும் பதிவாளர், தலைமை பொறியாளர் (உற்பத்தி, சேவைகள் மற்றும் பராமரிப்பு), கிளிநொச்சி ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் கிளை அதிபர் மற்றும் பிரதி கிளை அதிபர் ஆகிய பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆகியவற்றுடன் கலந்துரையாடி அந்த பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் நிறுவனத்தின் ஊழியர் பதவிகளை மீள்கட்டமைக்கும் போது சம்பள படியேற்றங்கள் தொடர்பில் ஏற்பட்ட சிக்கலான நிலைமைகள் முகாமைத்துவு சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டு திருத்துவதற்கு 2019 மே 23 ஆந் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் தொடர்பான கணக்குகள் குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட கட்டளைகள் 2024 திசெம்பர் 31 ஆந் திகதிய வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பத்திரிகை அறிவித்தல் வெளியிடுவதற்கு அங்கீகாரம் வழங்குமாறு கோரி வரிசை அமைச்சிற்கு கடிதமொன்று 2025.03.24 ஆந் திகதி அனுப்பப்பட்டுள்ளது. அதற்காக அங்கீகாரம் கிடைத்த பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. | மனித வளங்களை திறம்பட பயன்படுத்துவதற்கும் தேவையான அங்கீகாரத்தின் அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |